தொழில் மூலதனக் கூட்டு நிறுவனம்

* 216 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மெட்ராஸ் இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் மூலம் தமிழகத்திலுள்ள பஞ்சாலைகளுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள கடன் தொகைகளின் மதிப்பென்ன?

(இ) அவ்வாறு கடன் வழங்குவதற்கு வரையறை ஏதேனும் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Corporation has sanctioned up to 31st December 1965 cash and joint loans amounting to Rs. 9-13 crores and guarantee loans amounting to Rs. 2-07 crores to the Textile Mills in the State.

(b) The policy of the Corporation is to sanction a maximum loan of Rs. 25 lakhs to a textile Mill if it is a new unit and Rs. 16 lakhs if it is an old unit.

திரு. எம். எஸ். மணி: இப்படிக் கடன் வழங்கப்பட்ட தொகைகளைத் திரும்பப் பெறுவதற்கு அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முயற்சி எடுக்கவேண்டும் என்பது அல்ல. திரும்பிக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. இதுவரை 'டிஃபால்ட்' ஏற்படவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: 31—12—1965 வரையில் சுமார் ஒன்பது கோடி ரூபாய் கடன் அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனை ஆலைகளுக்கு இந்தப் பணம் சென்றிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சற்றேறக்குறைய நம்முடைய ராஜ்யத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு ஆலைக்கும் கொடுக்கப்பட்டதாக எனக்கு ஞாபகம்.

State Transport Bus Service between Madras and Tirupathi

* 217 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR:
SRI V. SANKARAN:
SRI S. J. RAMASWAMI: } Will the Hon. the Minister for Industries be pleased to state the decision reached at the Conference of the Chief Ministers and the Transport Ministers of the Madras and Andhra Pradesh Governments held on 30th August 1965 on the re-introduction of the State Transport bus service between Madras and Tirupathi?

THE HON. SRI R. VENKATARAMAN : At the conference it was agreed that Andhra Pradesh authorities and the Director, Madras State Transport Department might meet and work out

9th March 1966]

the details regarding the reintroduction of services on the routes from Madras to Tirupathi. Accordingly they met and it has been decided that the Madras State Transport Department and the Andhra Pradesh State Road Transport Corporation should operate two routes each from Madras to Tirupathi. The services commenced operation on 15th October 1965.

திரு. வை. சங்கரன் : திருப்பதி அடிவாரத்திற்குப் பிரயாணிகள் போய்விட்டால், அங்கிருந்து திருமலைக்குப் போக பஸ் கிடைப்பதற்குப் பல மணி நேரம் காத்திருக்கவேண்டியிருக்கிறது. திருப்பதி வரையில் செல்லும் பஸ்கள், தொடர்ந்து திருமலைக்கும் போவதற்கு ஏதாவது உடன்பாடு செய்துகொள்ளப்படுமானால் பிரயாணிகளுக்கு வசதியாக இருக்கும். அதையும் செய்ய சர்க்கார் முற்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஆந்திர சர்க்காரினுடைய பொறுப்பு. இந்த சர்க்கார் இதில் ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : சென்னைக்கும் திருப்பதிக்கும் இடையே இப்பொழுது இரண்டு சர்க்கார் பஸ்கள் தான் ஓடுகின்றன. அது மிகவும் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் துரித பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது இன்டர்-ஸ்டேட் விவகாரமாக இருப்பதால், ஆந்திர சர்க்கார் அதிகமாக விடுவதற்கு ஒத்துக்கொண்டால்தான் நாம் அதிக பஸ்களை விட முடியும். நாம் எத்தனை பஸ்கள் விடுகிறோமோ அத்தனை பஸ்கள் அவர்களும் விடவேண்டும். இது இரண்டு ராஜ்யங்களும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். கனம் உறுப்பினர் சொல்வது போல், இரண்டு பஸ்கள் போதவில்லை என்ற கருத்து எங்களிடம் தெரிவிக்கப்படவில்லை.

Marina Road.

* 218 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :—

(*a*) whether there is any proposal before the Government to remove the massive concrete balustrades on either side of Marina Road in the City of Madras to preserve its scenic beauty; and

(*b*) If so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : நீலக் கடல் ; அதையொட்டி தங்க நிறமான கடற்கரை; அதையடுத்து வண்ண மலர்கள் நிறைந்த பூங்காக்கள்; அதையடுத்து செங்கல் நிற நடைபதைகள் ; இதன் நடு நடுவே